# WORD OF CHRIST

# கிறிஸ்துவின் வசனம்




ஆசிரியர்
சகோ. அர்ச்சுனன் M.A., A.Bs.,

# கிறிஸ்துவின் வசனம்
# WORD OF CHRIST

மரம் 3 ஆகஸ்ட் 1994 கனி 1

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; கொலோசெயர் 3:16

## விக்கிரகாராதனை
## IDOL WORSHIP

மனிதன் தேவனைப் பார்க்க துடிக்கிறான். அப்படிமுயற்சிக்கும் போது அவனுக்கு வரக்கூடிய கற்பலனையை ஒருமனித உருவத்தைப் போலவும், இவ்வுலகத்திலுள்ள மிருகங்களைப் போலவும். அல்லது ஏதோ ஒரு பொருளைப் போலவும் உருவாக்கி தொழுது கொள்ளுகிறான். உண்டாக்கினவரை தொழுது கொள்ளாமல் தேவன் உண்டாக்கினதை தொழுது கொள்ளுகிறான். ஒரு தகப்பன், மகனை அல்லது மகளை பெற்றெடுக்க முடியும், மாறாக ஒரு மகன் அல்லது ஒரு மகள் ஒரு தகப்பனை பெற்றெடுக்க முடியாது. இது உலகறிந்த உண்மையாக இருக்கிறது, இப்படியிருக்கநாம் தேவனை உண்டாக்க முடியுமா? முடியாதே. நம்மை உண்டாக்கின தேவன் என்ன சொல்லுகிறார்? மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும், யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீஉனக்கு உண்டாக்க வேண்டாம் .........நீங்கள் எனக்கு ஒப்பாக வெள்ளியினாலே தெய்வங்களையும், பொன்னினாலே தெய்வங்களையும் உங்களுக்கு உண்டாக்கவே வேண்டாம்—யாத் 20:4,23. இன்றைய நாட்களிலும் மனிதர்கள் அவரவர் வீடுகளிலே இக்கட்டளையை மீறி அச்சடிக்கப்பட்ட உருவப்படங்களை வைத்துக் கொண்டு, அதற்கு முன்நின்று தொழுது கொள்கிறார்கள். சிலர் சூரிய நமஸ்காரம்,இயற்கை நமஸ்காரம் என்று வான சேனையை பணிந்து கொள்கிறார்கள்.

தேவனை ஒருவரும் ஒருபோதும் கண்டதில்லை என்று I யோவான் 4:12 ல் வாசிக்கின்றோம். அநேகர் நான் இயேசுவைக் கண்டேன், அவர் என்னோடு பேசினார் என்று முகமுகமாய் பார்த்தது போல் சொல்லுகிறார்கள். தேவன் என்ன சொல்லுகிறார் ... யாத் 33:20 நீ என் முகத்தைக்காணமாட்டாய், ஒருமனுஷனும்என்னைக் கண்டு உயிரோடிருக்கக் கூடாது என்றார். பிரிய நண்பரே! இப்பொழுது சொல்லுங்கள், நீங்கள் பார்த்தது தேவனையா அல்லது

ஒளியின் வேஷத்தைத் தரித்த பிசாசையா. மோசம் போகாதிருந்தேன்
தேவனை அறிகிற அறிவில் வளர்ச்சியடையுங்கள். நாம் தரிசித்து
நடவாமல் விசுவாசித்து நடக்கின்றோம். தேவன் ஒருவர் உண்டெ
ன்றும். அவர் நம்மை உண்டாக்கின ஜீவனுள்ள தேவனென்றும்
விசுவாசித்து நாம் ஜீவிக்க வேண்டும்.

தேவன் ஆவியாயிருக்கிறார் அவரை தொழுது கொள்ளுகிறவர்
கள் ஆவியோடும், உண்மையோடு தொழுது கொள்ள வேண்டும்
யோவா 4:24, தம்மை தொழுது கொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவ
ர்களாய் இருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். ஆவிக்குரிய
தொழுகை என்பது குதித்துக் கொண்டு பொய்சாமியாடும் மக்க
ளைப் போல் ஆடுவதல்ல. நமக்கும் தேவனுக்கும் நெருங்கிய தொடர்
போடு நம்முடைய இருதயத்தை அவர்முன் ஊற்றிவிட வேண்டும்
உலக சிந்தனைகளை அகற்றிவிட்டு ஆவிக்குறிய சிந்தனையோடு
சரித்திருக்க வேண்டும். நம்முடைய தேவன் பரலோகத்திலிருக்கி
றார். அவர், நாம் ஜீவிக்கிற இந்த உலகத்தையும், அதற்கு மேலும்
கீழுமுள்ள அண்டசராசரங்களையும் உண்டாக்கினவர் அவருக்கு
ஒப்பாக விக்கிரகத்தை உண்டாக்குவதோ அல்லது உண்டாக்கப்
பட்ட பொருளை வீட்டில் வைத்திருப்பதோ வேத வசனத்தின்படி
தவறாகும். நாங்கள் சும்மா அந்த படத்தை வைத்திருக்கிறோம்.
அப்படத்தைக் கும்பிடுவதில்லை என்று சொல்லுவார்கள். பிரிய
நண்பரே! ஆகாத குப்பையை நாம் பீரோவிலோ அல்லது முக்கிய
இடங்களிலோ மாட்டிவைப்பதில்லை. உடனே வெளியே எறிந்து
விடுகிறோம் உண்மைதானே! அப்படியென்றால் இவ்வளவு காலமா
நீங்கள் தெரியாமல் நமஸ்கரித்துக் கொண்டுவந்த அந்த வீணான
உருவப்படத்தை அல்லது சிலையை எடுத்து வெளியே எறிந்து
போடுங்கள். பரலோகத்தில் மிகுந்தசந்தோஷமுண்டாகும். தேவனும்
உங்களைக் குறித்து சந்தோசப்படுவார், என் பிள்ளை வேத வார்த்
தையின்படி செயல்படுகிறதே என்று சொல்லி. என்ன நினைக்கிறீர்
கள்? மனம் கேட்கவில்லையா, நாம் எப்படி அதை வெளியேஎறிந்து
விடுவது. யாருக்காவது கொடுத்துவிடலாமென்று நினைக்கிறீர்களா?
அப்படி கொடுத்தால் குருடருக்கு வழிகாட்டுகிற குருடர்களாய்
இருப்பீர்கள். அவர்கள் அதை நமஸ்கரித்து ஜீவனுள்ள தேவனை
மறந்து விழுந்து போவார்கள்.

வானமும், பூமியும் ஒழிந்து போம்; என்வார்த்தைகளோ ஒழிந்து
போவதில்லை என்று ஆண்டவராகிய இயேசு நமக்கு சொல்வதை
வாசிக்கின்றோம் ஆண்டவருடையவசனங்கள்ஒழிந்து போவதில்லை
ஆகையால்அழியாதவசனத்திற்குசெவிகொடுத்துபின்தொடர்வோம்

ஒழிந்து போகிற இப்பூமியிலிருந்து எடுக்கப்பட்டவை களால் செய்யப்பட்ட, ஆண்டவருக்கு ஒப்பாக இருக்கக் கூடிய விக்கிரகத்தை நாம் நமஸ்கரிக்கக் கூடாது. ''வேதமே வெளிச்சம்'' போதக சிட்சையே ஜீவ வழி நீதி 7: 23 என்றவசனத்தைப் பிடித்துக் கொண்டு செயல்பட வேண்டும். கர்த்தரை பயத்தோடும், நடுக்கத்தோடும், பரிசுத்தத்தோடும், ஆவியோடும் தொழுது கொள்ளுவோம். கர்த்தர் நம்மைவழி நடத்துவராக.

**O சபைசெய்திகள் :**

1. ஜூலை 3ம் தேதி சகோதரி எப்சிபா கனகராஜ் அவர்களுக்கு கர்த்தர் ஒரு பெண் குழந்தையைக் கொடுத்தார் தாயும் குழந்தையும் நலமுடன் இருக்கிறார்கள். இவர்களுக்காக ஜெபியுங்கள்.
2. கர்த்தருக்குச் சித்தமானால் இம்மாத சுவிசேஷகூட்டம் நடைபெறும். தொடர்பு கொண்டு பயன் பெறுங்கள்.

**O ஜூலைமாதவேதஅறிவுபோட்டியில்வெற்றிபெற்றவர்கள்**

| | | |
|---|---|---|
| 1 சகோ. | ஷர்லோ | பாண்டிச்சேரி |
| 2 சிறுமி. | ஜாஸ்மின் | அம்மாபட்டி |
| 3. சிறுமி. | முனியம்மாள் | வத்தலக்குண்டு |

**O ஜூலை மாத இதழின் விடைகள்**

| | | |
|---|---|---|
| 1. உங்களால் | அப் | 5: 39 |
| 2. கணக்கொப்பு—விப்பான் | ரோ | 14: 12 |
| 3. கர்த்தரை | II கொரி | 10: 17 |
| 4. யோபு | யோபு | 30: 26 |
| 5. பொய் | நீதி | 10: 18 |
| 6. சங்கீதம் | 119 | |
| 7. சரி | | |
| 8. விருத்தசேதனமுள்ளவர்களுக்கு | | |
| 9. பவுல், — தீமோத்தேயுவுக்கு | | |
| 10. இல்லை | | |

**O சிறுவர் வேத அறிவு போட்டி விடைகள்**

| | |
|---|---|
| 1. வாழ்ந்திருக்கவும் | பிலி 4: 12 |
| 2. சந்தோசமாயிருங்கள், சந்தோசமாயிருங்கள் | பிலி 4: 4 |
| 3. பரலோகத்திலிருக்கிறது | பிலி 3: 20 |
| 4. கிறிஸ்துவுக்காக | பிலி 3: 7 |
| 5. ஜீவன் | பிலி 1: 21 |

**O இம்மாத வேத அறிவு போட்டி**

முதல் ஐந்திற்கு வசன ஆதாரத்துடனும், கடை ஐந்திற்கு விடை மட்டும், வேதத்திலிந்து இம்மாதம் 25 ம் தேதிக்குள் ஒரு அஞ்சல் அட்டையில் எழுதி அனுப்புக.

1. தேவனுடைய நாமம் புறஜாதிகளுக்குள்ளே உங்கள் மூலமாய் என்ன செய்யப்படுகிறது?
2. தன் சகோதரனைப் பகைக்கிற எவனும் எப்படிப்பட்டவனா யிருக்கிறான்?
3. எனக்குப் பிரியமானவர்களே, எதற்கு விலகி ஓடவேண்டும்?
4. நியாயப்பிரமாணிக்கன் அவன் பாதங்களை விட்டு ஒழிவதும் இல்லை; ஜனங்கள் அவரிடத்தில்சேர்வார்கள் என்றுயார் யாரைப் பார்த்து சொல்வது?
5. பூமியின் கனியைப் பட்சித்துப் போடுகிறவைகளை உங்கள் நிமித் தம் கண்டிப்பேன் என்று யார் சொல்வது?
6. இஸ்ரவேலை உயிரோடே காக்க இஸ்ரவேலுக்குள் யாரை தேவன் எகிப்திற்கு முன்னே அனுப்பினார்?
7. ஆண்டவர் இயேசுசட்டதிட்டங்களாகியநியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாமிசத்தினாலே ஒழித்தாரா?
8. சபையில் பெண் பிரசங்கியார்களை ஏற்படுத்தலாமா?
9. ஆண்டவராகியஇயேசு கிறிஸ்துஎந்தகிழமைஉயிர்த்தெழுந்தார்?
10. ஆண்டவராகி இயேசுகிறிஸ்து எந்த கிழமை சிலுவையில் அறையப்பட்டார்?

**O இம்மாத சிறுவர் வேத அறிவுப்போட்டி**

கொலோசெயர் புத்தகத்திலிருந்து நிரப்புக

1. அவரே சபையாகிய ——— தலையானவர்
2. ——— உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக.
3. இடைவிடாமல் ———
4. பிள்ளைகளே. உங்கள் பெற்றாருக்கு ——— கீழ்படியுங்கள்.
5. அவருக்குள் …………, .. …… என்பவைகளாகிய பொக்கிஷங் களெல்லாம் அடங்கியிருக்கிறது.

## கிறிஸ்துவின் சபை ஊழியர்களுக்கு

உங்கள் சபையில்நடக்கிறபிறப்பு,இறப்பு,பரிசுத்தவிவாகம்,சுவி சேஷக்கூட்டம், வேதபாட கருத்தரங்குகள், இன்னும் வேறுஏதாவது முக்கிய நிகழ்ச்சிகள் அல்லது சபை தேவைகள் இருந்தால் உங்கள் முகவரியுடன். மூன்று அல்லது நான்கு வரிகளில் செய்தியை பிரதி மாதம் 25 ம் தேதிக்குள் எமக்கு வந்து சேரும்படி அனுப்பி வைத்தால் இவ்விதழில் இலவசமாக பிரசுரிக்கப்படும். இது இந்தியாவிலுள்ள பிராந்திய சபைகளுக்கு பிரயோஜனமாக இருக்கும். ஒருவருக்காக ஒருவர் ஜெபிக்க வசதியாக இருக்கும்.

O தாடிக்கொம்பு கிறிஸ்துவின் சபைசெய்திகள்

| ஞானஸ்நானம்எடுத்தவர் | ஊர் | தேதி | ஊழியர் |
|---|---|---|---|
| 1. சகோ. வேளாங்கண்ணி | இன்னாசியார்புரம் | 30.7 94 | சகோ. செல்லத்துரை |
| 2. வின்சென்ட்பவுல்ராஜ் | ,, | ,, | |
| 3. சகோதரி. மரியசெல்வம் | ,, | ,, | |
| 4. சகோதரி. கவிதா | சுக்காம்பட்டி | ,, | |

உ.தவியவர்கள். சகோ. தனிஅரசு.சென்னை.
சகோ. அர்ச்சுணன், வத்தலக்குண்டு சகோ. பால்ராஜ், திருச்சி.

## கர்த்தருக்கு சித்தமானால்

இம் மாதம் மூன்றாவது வாரத்தில் வத்தலக்குண்டு
கிறிஸ்துவின் சபையார்கள் கூடும் இடத்தில்
சுவிசேஷ கூட்டம் நடைபெறும்

செய்தி: சகோ. பீட்டர்சாலமோன். சென்னை
உலகமெங்கும் பல இடங்களில் தேவனால்
பயன்படுத்தப்பட்டு வரும் பிரசங்கியார்

வாருங்கள்! பயன்பெறுங்கள்! !

கடித தொடர்பு கொள்ளுங்கள் தேதி அறிவிக்கப்படும்
தொடர்பு

சகோ. அர்ச்சுணன் கிறிஸ்துவின் சபை ஊழியர்
தபால் பெட்டி எண் 5, வத்தலக்குண்டு 624202

அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய்
சர்வசிருஷ்டிக்கும்சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். மற் 16:15

MONTHLY MAGAZINE
WORD OF CHRIST Regd No. 84661-92.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

இவ்விதழ் இலவசமாக
அனுப்பப்படுகிறது

எங்களோடு சேர்ந்து தேவனை
ஆராதிக்க அன்புடன்
அழைக்கின்றோம்.

ஞாயிறு காலை 8.30
புதன் மாலை 7.00

கிறிஸ்துவின் சபை
கணவாய்ப்பட்டி ரோடு,
வத்தலக்குண்டு-624202

PRINTED MATTER

TO.

If undelivered please return to
From
**THE EDITOR**
WORD OF CHRIST
P. Box No. 5
**Batlagundu-624202**
S. India

Edited and published by B. Arjunan M.A., A.Bs., on behalf of church of christ. near water tank, Batlagundu
Printed by C. Pandiyarajan B.Sc, SHANTHI PRINTING PRESS Main Road Batlagundu-624202. S. India